மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் நேற்று (02.12.2023) தமிழ்நாடு முழுவதும் நடைபெறவுள்ள 2000 மழைக்கால சிறப்பு மருத்துவ முகாம்கள் மற்றும் முதலமைச்சரின் விரிவான மருத்துவக் காப்பீட்டுத் திட்ட சிறப்பு முகாமினைத் தொடங்கி வைக்கும் விதமாக, பெருநகர சென்னை மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் நடைபெறவுள்ள 100 மழைக்கால சிறப்பு மருத்துவ முகாம் மற்றும் முதலமைச்சரின் விரிவான மருத்துவக் காப்பீட்டுத் திட்ட சிறப்பு முகாமினை இராயபுரம் மண்டலம், புதுமனைக் குப்பம், மாதா சர்ச் தெரு, புனித பீட்டர்ஸ் மேல்நிலைப்பள்ளியில் தொடங்கி வைத்துப் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார். இந்த ஆய்வின்போது, இராயபுரம் சட்டமன்ற உறுப்பினர் ஐட்ரீம் ஆர்.மூர்த்தி, தமிழ்நாடு சுகாதார திட்ட இயக்குநர் ம.கோவிந்தராவ், துணை ஆணையாளர் (கல்வி) திருமதி ஷரண்யா அறி, வடக்கு வட்டார துணை ஆணையாளர் கட்டா ரவி தேஜா, நிலைக்குழுத் தலைவர்கள் டாக்டர் கோ. சாந்தகுமாரி (பொதுசுகாதாரம்), தா.இளையஅருணா (நகரமைப்பு), பொதுசுகாதாரம் மற்றும் நோய்த்தடுப்பு மருந்துத்துறை இயக்குநர் மருத்துவர் டி.செல்வவிநாயகம், மாமன்ற உறுப்பினர் ரா. சுரேஷ்குமார் மற்றும் அலுவலர்கள் உடனிருந்தனர்.

தமிழ்நாடு முழுவதும் 2 ஆயிரம் மழைக்கால சிறப்பு மருத்துவ முகாம்!

முதலமைச்சரின் விரிவான காப்பீடு முகாம் இன்றும் தொடரும்!

மருத்துவக் காப்பீடு அட்டையினை வழங்கி அமைச்சர் மா.சுப்பிரமணியன் ஆய்வு!

சென்னை, டிச. 3 -

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் உத்திரவின்படி, அமைச்சர் மா.சுப்பிரமணியன் நேற்று (02.12.2023) தமிழ்நாடு முழுவதும் நடைபெறவுள்ள 2000 மழைக்கால சிறப்பு மருத்துவ முகாம்கள் மற்றும் முதலமைச்சரின் விரிவான மருத்துவக் காப்பீட்டுத் திட்ட சிறப்பு முகாமினைத் தொடங்கி வைக்கும் விதமாக, பெருநகர சென்னை மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் நடைபெறவுள்ள 100 மழைக்கால சிறப்பு மருத்துவ முகாம் மற்றும் முதலமைச்சரின் விரிவான மருத்துவக் காப்பீட்டுத் திட்ட சிறப்பு முகாமினை இராயபுரம் மற்றும் நீலாங்கரை பகுதிகளில் தொடங்கி வைத்து பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

பின்னர் செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது:

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் பொறுப்பேற்ற பிறகு காப்பீட்டுத் திட்டத்திற்கான பிரீமியம் தொகை ரூ.699 இருந்து ரூ.849 ஆக உயர்த்தப்பட்டுள்ளது. கடந்த ஆட்சி காலத்தில் ஆண்டு வருமானம் ரூ.72,000 ஆக இருந்தது, அது தற்போது ரூ.1,20,000 ஆக உயர்த்தப்பட்டுள்ளது. காப்புறுதித் தொகை ரூ.2 இலட்சத்தில் இருந்து தற்போது ரூ.5 இலட்சமாக உயர்த்தப்பட்டுள்ளது. மேலும், கடந்த ஆட்சியில் இருந்த 1450 சிகிச்சை முறைகள் தற்போது 1513 ஆக உயர்த்தப்பட்டுள்ளது. கடந்த ஆட்சியில் இருந்த அங்கீகரிக்கப்பட்ட மருத்துவமனைகளின் எண்ணிக்கை 970 ஆக இருந்தது, தற்போது 2 மடங்காக உயர்த்தப்பட்டு 1829 மருத்துவமனைகளில் இந்த காப்பீட்டுத் திட்டம் பயன்பாட்டில் உள்ளது. மேலும் 2 ஆக இருந்த உயர்சிறப்பு சிகிச்சை முறைகள் தற்போது 8 ஆக உயர்த்தப்பட்டுள்ளது. தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் இந்த காப்பீட்டுத் திட்டத்தின் கீழ் புதிய குடும்ப உறுப்பினர்களை சேர்க்கும் பணியினை மேற்கொள்ள தொடர்ந்து அறிவுறுத்தி வருகிறார். அதன்படி முத்தமிழ் அறிஞர் கலைஞர் நூற்றாண்டினை முன்னிட்டு இன்று ஒரே நாளில் 100 இடங்களில் புதிய உறுப்பினர் சேர்க்கை முகாம்கள் நடைபெறுகிறது. சென்னையில் மட்டும் 5 இடங்களிலும், சென்னை நீங்கலாக 95 இடங்களிலும் இந்த முகாம்கள் நடைபெற்று வருகிறது. மேலும்தமிழ்நாடுமுழுவதும் 100 இடங்களில் முதலமைச்சரின் விரிவான மருத்துவக்காப்பீடு முகாம்களில் பயன் பெறும் மக்களின் தேவைக்கேற்ப நாளை (03.12.2023) காப்பீடு முகாம் தொடர்ந்துநடைபெறும். இதில் பொது மக்கள் தங்களுடைய பழைய அட்டைகளை புதுப்பித்துக்கொள்ளலாம், அவர்களுடைய சந்தேகங்களுக்கு உரிய விளக்கங்கள் தரப்படும், மேலும் புதிய குடும்ப உறுப்பினர்களை சேர்க்கும் பணிகளும் நடைபெறுகிறது.

மழைக்கால சிறப்பு மருத்துவ முகாம்கள்!

தமிழ்நாடு முழுவதும் 2000 மழைக்கால மருத்துவ சிறப்பு முகாம்கள் இன்று நடைபெறுகிறது. மேலும் பெருநகர சென்னை மாநகராட்சியின் சார்பில் இன்று 100 இடங்களில் மழைக்கால சிறப்பு மருத்துவ முகாம்கள் நடைபெறுகிறது. தமிழ்நாடு முழுவதும் 2000 இடங்களில் மழைக்கால சிறப்பு மருத்துவ முகாம்கள் நடைபெற்று வருகிறது. மக்கள் நல்வாழ்வுத் துறையின் வரலாற்றில் முதன்முறையாக வடகிழக்கு பருவமழையினை முன்னிட்டு தொடர்ந்து 10 வாரங்கள் சிறப்பு மருத்துவ முகாம்கள் நடத்தப்பட்டு வருகிறது. இன்று 6வது வாரமாக மழைக்கால சிறப்பு மருத்து முகாம்கள் நடத்தப்பட்டு வருகிறது. அந்தவகையில்கடந்த 5 வாரங்களில்இதுவரை 10,576 முகாம்கள் நடைபெற்றுஅதில் 5,21,853 பேர்பங்கேற்று பயன்பெற்றுள்ளனர். டிசம்பர் மாதம் 30ந்தேதி வரை 4 வாரங்கள் இந்த முகாம்கள் நடத்தப்பட விருக்கிறது. மழைக்கால நோய்களான மலேரியா, டெங்கு, சிக்கன் குனியா, இன்புளுயன்சா, டயாரியா போன்ற நோய் பாதிப்புகள், காய்ச்சல் பாதிப்புகள், வறண்ட இருமல், சளி தொல்லை, சேற்றுப்புண் போன்ற பாதிப்புகள் உள்ளவர்கள் இம்மருத்துவ முகாம்களில் கலந்து கொண்டு பயன் பெற வேண்டும்.

தியாகராயநகர் பகுதியினைப் பொறுத்தவரை அடையார் ஆற்றில் 6000 கன அடிநீர் ஒரே நேரத்தில் திறந்து விடப்பட்டுள்ளது. இதே அளவு கனஅடி நீர் அதிமுக ஆட்சிக்காலத்தில்திறந்திருந்தால் விருகம் பாக்கம், குரோம்பேட்டை, ஆலந்தூர் மாதிரியான பகுதிகளில் உள்ளகுடிசைகளும், சைதாப்பேட்டை பொறுத்தவரை சாரதிநகர், விநாயகபுரம், செட்டித் தோட்டம், ஜோதியம்மாள் நகர், ஜோதித்தோட்டம், நெருப்பு மேடு, திடீர் நகர், கோதாமேடு, சலவையார் காலனி, சூர்யாநகர், கோட்டூர்புரம் ஆகிய பகுதிகளில் உள்ள மக்களை வேறு பகுதிகளில் குடியமர்த்துவார்கள் அதிமுக ஆட்சிக்காலத்தில். எங்களது ஆட்சிக்காலத்தில் இந்த பகுதிகளில் 162 நிவாரண மையங்கள்திறந்து வைத்திருந்தோம். இதில் ஒருவர் கூட நிவாரண மையங்களில் வந்து தங்கவில்லை. எனவேஇதிலிருந்து என்ன தெரிகிறது ஒரு குடிசைப் பகுதிகள் கூட பாதிக்கப்படவில்லை என்று அமைச்சர் .மா.சுப்பிரமணியன் தெரிவித்தார்.

இந்நிகழ்வில் தமிழச்சி தங்க பாண்டியன் எம்.பி. இராயபுரம் சட்டமன்ற உறுப்பினர் ஐட்ரீம் ஆர். மூர்த்தி, சோழிங்கநல்லூர் சட்டமன்ற உறுப்பினர் அரவிந்த்ரமேஷ், தமிழ்நாடு சுகாதார திட்ட இயக்குநர் ம.கோவிந்தராவ், துணை ஆணையாளர் (கல்வி) திருமதி ஷரண்யா அறி, , வடக்கு வட்டார துணை ஆணையாளர் கட்டா ரவி தேஜா, பொதுசுகாதாரம் மற்றும் நோய்த்தடுப்பு மருந்துத் துறை இயக்குநர் மருத்துவர் தி.சி.செல்வவிநாயகம், நிலைக்குழுத் தலைவர்கள் டாக்டர் கோ. சாந்தகுமாரி (பொதுசுகாதாரம்), தா.இளையஅருணா (நகரமைப்பு), மண்டலக் குழுத் தலைவர் மதியழகன், மாமன்ற உறுப்பினர் ரா. சுரேஷ்குமார் மற்றும் உயரலுவலர்கள், பொதுமக்கள்கலந்துகொண்டனர்.

இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே. சேகர்பாபு நேற்று (02.12.2023) கொளத்தூர் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட பாலாஜி நகர் பிரதான சாலையில் மழைநீர் வெளியேற்றப்படுவதை பார்வையிட்டு ஆய்வு செய்தார். உடன் நகர் ஊரமைப்பு இயக்குநர் பா.கணேசன், மாநகராட்சி மத்திய மண்டல துணை ஆணையர் கே.ஜே.பிரவீன்குமார், மண்டலக் குழுத் தலைவர் திருமதி சரிதா மகேஷ்குமார், பகுதிச் செயலாளர் ஐ.சி.எப்.வ.முரளிதரன் மாநகராட்சி உறுப்பினர்கள் மற்றும் அலுவலர்கள் உள்ளனர்.

கொளத்தூர், பாலாஜி நகர் பகுதியில்

மழைநீர் வெளியேற்றும் பணிகள் - மருத்துவ முகாம்!

அமைச்சர் பி.கே. சேகர்பாபு நேரில் ஆய்வு செய்தார்!

சென்னை, டிச. 3

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் உத்தரவின்படி, இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் பி.கே. சேகர்பாபு நேற்று (02.12.2023) கொளத்தூர் சட்டமன்றத் தொகுதியில் கனமழையால் பாதிக்கப்பட்ட பாலாஜி நகர் பிரதான சாலை, குமரன் நகர், திருப்பதி நகர், வளர்மதி நகர், நேர்மை நகர் ஆகிய பகுதிகளில் மழைநீர் வெளியேற்றும் பணிகள், மருத்துவ முகாம்கள், சாலைகளை தூய்மைப்படுத்துதல் மற்றும் உணவு பணிகளை பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர்பி.கே. சேகர்பாபு, நேற்று மாநகராட்சி மத்திய மண்டல அலுவலகத்தில் நடைபெற்ற பருவமழை முன்னேற்பாடு பணிகள் தொடர்பான அனைத்துத்துறை அலுவலர்களின் ஆலோசனைக் கூட்டத்தில் அறிவுறுத்தியபடி, கொளத்தூர் சட்டமன்றத் தொகுதியில் நடைபெற்று வரும் பணிகளை நேற்று ஆய்வு செய்தார்.

நோய்த் தொற்று ஏற்படாமல் பாதுகாத்திடும் வகையில் பாலாஜி நகரைச் சேர்ந்த நேர்மை நகரில் அமைக்கப்பட்டுள்ள மருத்துவ முகாமினை பார்வையிட்ட பின், பாலாஜி நகர் பிரதான சாலை, குமரன் நகர், திருப்பதி நகர், வளர்மதி நகர் ஆகிய பகுதிகளில் மழைநீர் வெளியேற்றப்படும் பணிகளையும், சாலைகளை தூய்மைப்படுத்தும் பணிகளையும் பார்வையிட்டு அலுவலர்களுக்கு அறிவுரைகள் வழங்கினார். அதனைத் தொடர்ந்து அக்பர் ஸ்கொயர் பகுதியில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உணவினை வழங்கினார்,

இந்த ஆய்வின் போது நகர் ஊரமைப்பு இயக்குநர் பா.கணேசன், மாநகராட்சி மத்திய மண்டல துணை ஆணையர் கே.ஜே.பிரவீன் குமார், மண்டலக் குழுத் தலைவர் திருமதி சரிதா மகேஷ்குமார், ஐசிஎப் பா. முரளீதரன், ஏ.நாகராஜன், கே. சந்துரு, சி. மகேஷ்குமார், என்.டி. தமிழ்ச்செல்வன். என். ராமச்சந்திரன், முருகன் மற்றும் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

அமலாக்கத் துறையின் சாயம் வெளுத்து விட்டது!

ம.தி.மு.க. பொதுச் செயலாளர் வைகோ அறிக்கை!

சென்னை, டிச. 3-

திண்டுக்கல் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவ மனையில் பணிபுரியும் மருத்துவர் டாக்டர் சுரேஷ் பாபு வருமானத்திற்கு அதிகமாக சொத்து சேர்த்ததாக, அமலாக்கத்துறை அவர் மீது 2018 இல் வழக்குப் பதிவு செய்திருந்தது. இந்த நிலையில், டாக்டர் சுரேஷ் பாபு விடம் வழக்கில் இருந்து விடுதலை செய்வதாக ரூ.3 கோடி லஞ்சம் தருமாறு மதுரை அமலாக்கத்துறை அதிகாரியான அங்கித் திவாரி கூறியுள்ளார்.

திண்டுக்கல் மதுரை தேசிய நெடுஞ்சாலையில் நேற்று முன்தினம் அதிகாலை அமலாக்கத்துறையைச் சேர்ந்த அதிகாரி அங்கித் திவாரி 20 லட்சம் ரூபாய் பணத்தைப் பெற்றுள்ளார்.

இது குறித்து மருத்துவர் ஏற்கனவே அளித்த புகாரின் பேரில் தகவலறிந்து அங்கு வந்த திண்டுக்கல் மாவட்ட லஞ்ச ஒழிப்பு டி.எஸ்.பி. தலைமையிலான காவல் துறையினர் அமலாக்கத் துறை அதிகாரி அங்கித் திவாரியின் காரிலிருந்து 20 லட்சம் ரூபாய் லஞ்ச பணத்தைக் கைப்பற்றி, அவரையும் கைது செய்தனர்.



தமிழ்நாடு இலஞ்ச ஒழிப்புத் துறை மிகத் திறமையாகச் செயல்பட்டு, கையும் மெய்யுமாக அங்கித் திவாரியை பிடித்தது பாராட்டுக் குரியதாகும்.

மதுரையில் உள்ள அமலாக்கத்துறை அலுவலகத்தில் லஞ்ச ஒழிப்பு காவல்துறையினர் சோதனை நடத்தச் சென்றனர். ஆனால் அங்கு சோதனை நடத்த மறுக்கப்பட்டது. பின்னர் அங்கித் திவாரி அலுவலகத்தில் மட்டும் சோதனை நடத்த அனுமதிக்கப்பட்டது.

ஒன்றிய பா.ஜ.க. அரசு, தனது அரசியல் எதிரிகளை பழிவாங்க பயன்படுத்தும் கருவியான அமலாக்கத் துறையில் எந்த அளவுக்கு லஞ்சம் ஊழல் புரையோடிக் கிடக்கிறது என்பதற்கு அமலாக்கத்துறை அதிகாரியின் கைது வெளிச்சம் போட்டு காட்டுகிறது.

மாநில அரசின் அனுமதி இன்றி இந்த அமலாக்கத் துறையை தலைமைச் செயலகத்துக்குள் ஏவி விட்டு தி.மு.க. அரசுக்கு அவப்பெயரை ஏற்படுத்த ஒன்றிய பா.ஜ.க. அரசு முனைந்தது.

தற்போது மதுரையில் அமலாக்கத்துறை அலுவலகத்திற்கு உள்ளே தமிழ்நாடு லஞ்ச ஒழிப்பு காவல்துறை நுழைந்து சோதனை நடத்தி இருப்பது வரவேற்கத்தக்கது.

மதுரை மற்றும் சென்னை அமலாக்கத்துறை அலுவலகங்களில் உள்ள பல அதிகாரிகளுக்கும் இதில் தொடர்பு இருப்பது தெரியவந்துள்ளது.

தமிழ்நாடு முழுவதும் உள்ள அமலாக்கத்துறை அலுவலகங்களிலும் தமிழ்நாடு லஞ்ச ஒழிப்பு காவல் துறை விசாரணை நடத்த வேண்டும்.

இந்தியா முழுவதும் அமலாக்கத்துறையில் இதே போன்று லஞ்ச ஊழல் தலைவிரித்து ஆடுகிறது.

ராஜஸ்தான் மாநிலத்தில் கடந்த அக்டோபர் 30 ஆம் தேதி, 30க்கும் மேற்பட்ட இடங்களில் அமலாக்கத்துறையினர் சோதனை நடத்தி இருந்தனர்.

அப்போது ஏலச் சீட்டு மோசடி விவகாரத்தில் குற்றவாளியைக் கைது செய்யாமல் இருக்க அமலாக்கத் துறை அதிகாரிகள் இரண்டு பேர் ரூ.17 லட்சம் லஞ்சம் கேட்டுள்ளனர். ஆனால் ரூ. 15 லட்சம்தான் கொடுக்க முடியும் என்று குற்றவாளி கூறியுள்ளார். இதனைத் தொடர்ந்து ரூ.15 லட்சம் பணத்தை வாங்கியபோது அமலாக்கத்துறை அதிகாரிகள் இரண்டு பேரையும் கையும் களவுமாக ராஜஸ்தான் லஞ்ச ஒழிப்புக் காவல் துறையினர் கைது செய்த நிகழ்வு நடைபெற்றிருந்தது.

தமிழ்நாடு, ராஜஸ்தான் மாநிலங்களில் அமலாக்கத் துறை அதிகாரிகள் லஞ்சம் வாங்கி பிடிபட்டதன் மூலம் ஒன்றிய பா.ஜ.க. அரசின் அரசியல் கருவியான அமலாக்கத்துறையின் சாயம் வெளுத்து விட்டது.

அமலாக்கத்துறை குறித்த நடவடிக்கைகள் வெளிப்படையாக மக்களுக்குத் தெரிய வேண்டும்.

அமலாக்கத் துறையைப் பயன்படுத்தி எதிர்க்கட்சிகள் ஆளும் மாநிலங்களில் ஒன்றிய பா.ஜ.க. அரசு நடத்திவரும் மிரட்டல் அரசியல் கடும் கண்டனத்துக்குரியது என்று ம.தி.மு.க. பொதுச் செயலாளர் வைகோ அவர்கள் விடுத்துள்ள அறிக்கையில் கூறியுள்ளார்.

அமைச்சர் பி.கே. சேகர்பாபு - டாக்டர் கலாநிதி வீராசாமி - டாக்டர் எழிலன் - டாக்டர் வி. கலைவாணன் முன்னிலையில்

கலைஞர் நூற்றாண்டை முன்னிட்டு சென்னை வடக்கு மாவட்டத்தில் தொடர் மருத்துவ முகாம்!

மாவட்டச் செயலாளர் தா.இளைய அருணா அறிவிப்பு! ஆர்.டி சேகர்- ஜே.ஜே.எபினேசர் - ஐட்ரீம் ஆர்.மூர்த்தி பங்கேற்பு!

சென்னை, டிச.3-

கழகத் தலைவர் தமிழ்நாடு முதலமைச்சர் தளபதி அவர்களின் அறிவுரைப்படி சென்னை வடக்கு மாவட்டம் ராயபுரம், ஆர்.கே. நகர், பெரம்பூர் ஆகிய மூன்று தொகுதிகளிலும் முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டை முன்னிட்டு தொடர் மருத்துவ முகாம்கீழ்க்கண்டவாறு நடைபெறுகிறது.

1. தொகுதி : ஆர் கே நகர்

தேதி : 3.12.23, ஞாயிற்றுக்கிழமை காலை 09.00 மணி. நிகழ்ச்சி ஏற்பாடு : டாக்டர் வி. கலைவாணன், ஜே .ஜே . பிராங்க்ளின். இடம்: தூய இருதய பள்ளி கொருக்குப்பேட்டை

2 . தொகுதி : பெரம்பூர்

தேதி : 7.12.23, வியாழக்கிழமை காலை 09.00 மணி. நிகழ்ச்சி ஏற்பாடு : டாக்டர் கார்த்திக், டாக்டர்.சீனிவாசன். இடம் : சென்னை பள்ளி, பெரம்பூர்.

3. ராயபுரம்.

தேதி: 24.12.23, ஞாயிற்றுக்கிழமை காலை 09.00 மணி. நிகழ்ச்சி ஏற்பாடு: டாக்டர் பாண்டியராஜ், டாக்டர் சுரேந்திரன்.

அனைத்து நிகழ்ச்சிகளிலும் இந்து சமயம் மற்றும் அறநிலைத்துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு, மாநில மருத்துவ அணி செயலாளர் டாக்டர் எழிலன், மாநில மருத்துவ அணி தலைவர் டாக்டர் கனிமொழி, நாடாளுமன்ற உறுப்பினர் டாக்டர் கலாநிதி வீராசாமி, சட்டமன்ற உறுப்பினர்கள் ஆர்.டி.சேகர், ஜே.ஜே.எபினேசர், ஐட்ரீம் ஆர்.மூர்த்தி,

மாநில நிர்வாகிகள் இரா.மதிவாணன், பி.டி. பாண்டி செல்வம், இரா. நரேந்திரன், ஆர்.எம்.டி. .ரவீந்திரன், தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள் ந.மனோகரன், இரா.கருணாநிதி, மாவட்ட நிர்வாகிகள் ஆர்.வெற்றி வீரன், மு.கோபி, எஸ்.ஆர். கமலக் கண்ணன், வி.தயாளன், நாகம்மை கருப்பையா.

பகுதி செயலாளர்கள் வ.பெ.சுரேஷ், இரா.செந்தில், இரா.லட்சுமணன், எஸ்.ஜெபதாஸ் பாண்டியன், அ.முருகன், க.ஜெயராமன், மண்டலக் குழு தலைவர்கள் நேதாஜி யு. கணேசன், கே.ஆர்.பி.ஸ்ரீராமுலு, நிலைக்குழு தலைவர்கள் என்.சர்ப்ப ஜெயதாஸ், பொதுக்குழு உறுப்பினர்கள் வே.சிவகுமார், நா.சண்முகம், கி.ராஜேந்திரன், எல். அருளரசன், ஏ.தமிழ்ச்செலுகூன், டி.கமலக்கண்ணன், பி.மதிவாணன், ஏ.அமுலு மற்றும் மாமன்ற உறுப்பினர்கள் என்.எம்.கதிரேசன் என்.குமாரி, என்.பவித்ரா, இ.மணிமேகலை, வி.விஜயகுமாரி, ஜெ.நிரஞ்சனா, எஸ். கீதா, பி.வேளாங்கண்ணி, கே.சர்மிளா காந்தி, ஏ.ஆர். ஆர்..மலைச்சாமி, எம். ஆனந்தி, அனைத்து வட்ட செயலாளர்கள், மாவட்ட பிரதிநிதிகள், அனைத்து அணிகளின் மாவட்ட தலைவர்கள், மாவட்ட அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள் மற்றும் கழக உறுப்பினர்கள் அனைவரும் கலந்து கொள்வர்.

மாதவரம் சட்டமன்ற தொகுதி மாத்தூர் 19வது வட்டம், பாலசுப்பிரமணியன் நகர் பகுதியில் புழல் ஏரியில் இருந்து வெளியேறும் உபரி நீர் சூழ்ந்ததால், மாத்தூர் அரசு உயர்நிலைப் பள்ளியில் தங்கியுள்ள பொதுமக்களுக்கு மாநகராட்சி சார்பில் வழங்கப்பட்ட இரவு உணவை, பகுதி செயலாளர் புழல் எம் நாராயணன், வட்டச் செயலாளர் மாத்தூர் கா.தாமரைச்செல்வன் வட்டத்துணை செயலாளர் ரகுவரன் மற்றும் மாநகராட்சி அதிகாரிகள் வழங்கினார்கள்.

கழக இளைஞரணி செயலாளரும் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டு துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு திருவள்ளூர் மேற்கு மாவட்ட விளையாட்டு மேம்பாட்டு அணி சார்பில் திருத்தணி அருகே உள்ள தளபதி கே.விநாயகர் மகளிர் கல்லூரி விளையாட்டு திடலில் மாவட்ட அளவிலான மாபெரும் கைப்பந்து போட்டி நடைபெற்றது இதில் திருவள்ளூர் மேற்கு மாவட்ட கழக செயலாளர் திருத்தணி எஸ்.சந்திரன் எம்.எல்.ஏ போட்டியை துவக்கி வைத்து விளையாட்டு வீரர்களை வாழ்த்தினர் அருகில் ஒன்றிய கழகச் செயலாளர் ஆர்த்தி ரவி, கூளூர் எம்.ராஜேந்திரன், மாவட்ட விளையாட்டு மேம்பாட்டு அணி அமைப்பாளர் பி.எல்.ஆனந்தன், மாவட்ட துணை அமைப்பாளர்கள் ஜெ.கலைவாணன், எஸ்.ஆர்.ஜெயேந்திரன் உள்பட கழக நிர்வாகிகள் கலந்து கொண்டார்கள்.